# சிறுவர் நூல்களுக்கான 17 காரணங்கள்

1. புத்தகம் எம்மை மகிழ்விப்பதுடன் ஆர்வத்தையும் தருகிறது. இது எம்மை அழ, சிரிக்க வைக்கிறது. இது எமக்கு ஆறுதலளிப்பதுடன் புதிய வாய்ப்புக்களையும் காட்டுகின்றது.

2. புத்தகம் எமது மொழியை மேம்படுத்தவும் சொல்வளத்தை விருத்தி செய்யவும் உதவுகிறது.

3. புத்தகம் எமது கற்பனையை ஊக்குவிப்பதுடன் உள்மனத் தோற்றங்களை உருவாக்க பயிற்றுகிறது.

4. புத்தகம் ஈடுபாடுமிக்க புதிய வினாக்களை எழுப்பி எமக்கு சிந்திக்க புதியதை வழங்குகிறது.

5. புத்தகம் சிந்தனையை விருத்தி செய்கிறது. அது எமக்கு புதிய எண்ணங்களையும் விளக்கங்களையும் வழங்குவதுடன் உணர்வையும் உலகையும் விஸ்தரிக்க உதவுகிறது.

6. புத்தகம் வேறு நாடுகளை பற்றிய அறிவையும் வெவ்வேறு வாழ்க்கைமுறைகள் பற்றியும் இயற்கை, தொழிநுட்பம், வரலாறு மற்றும் வானத்திற்கும் பூமியிற்கும் இடையே காணப்படும் நாம் அறிய விரும்பும் விடயங்கள் பற்றிய அறிவை எமக்கு வழங்குகிறது.

7. புத்தகம் பரிவு செலுத்தும் தன்மையை பயிற்ற உதவுகிறது. இது எமக்கு பிறருடைய நிலமையையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ள உதவுகிறது.

8. புத்தகம் சரி பிழை எது என்பதையும் எது நல்லது அல்லது தீயது என சிந்திக்கவைக்கிறது.

9. புத்தகம் யதார்த்ததை விளக்கவும் உலகம் எவ்வாறு ஒன்றுடன்ஒன்று தொடர்பு கொண்டுள்ளது என்பதை புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

10. புத்தகம் ஒரு கேள்விக்கு ஒரு பதில்தான் எப்போதும் இருக்கவேண்டும் என்பதல்ல பெரும்பாலான விடயங்களை வெவ்வேறு கோணங்களில் பார்க்கலாம் என்பதைக் காட்டுகிறது.

11. புத்தகம் எம்மை நாம் புரிந்து கொள்ள உதவுகிறது. இது தன்னம்பிக்கையை வலுப்படுத்துவதுடன் எம்மைப் போன்ற சிந்தனை மற்றும் உணர்வுகளை வேறு பலரும் கொண்டுள்ளார்கள் எனக் கண்டு கொள்ள உதவுகிறது.

12. புத்தகம் நாமும் வேறுபட்டவர்கள் என்பதை புரிந்து கொள்ள உதவுகிறது. வேறுபட்ட கால மற்றும் கலாச்சாரங்களை சார்ந்த எழுத்தாளர்களின் புத்தகங்கள் எமக்கு பெரும் சகிப்புத்தன்மையை வழங்குவதுடன் பாரபட்சமான எண்ணங்கள் ஏற்படாவண்ணம் தடுக்கிறன.

13. புத்தகம் நாம் தனிமையாக இருக்கும்போது துணை தருகிறது. இதை நாம் இலகுவாக எடுத்துச் செல்லலாம் அத்துடன் எங்கும் வாசிக்கலாம். நூலகத்தில் இலவசமாக இரவல் பெறலாம்.

14. புத்தகம் கலாச்சார பரம்பரை பெறுமானங்களின் ஒரு பகுதியாகும். இது எமக்கு பொதுவான வாசிப்பு அநுபவத்தையும் பொதுவான மேற்கோளுக்கானகட்டமைப்புக்களையும் வழங்குகிறது.

15. ஒரு சிறந்த சிறுவர் புத்தகம் வளர்ந்தவருக்கும் சிறுவருக்கும் மகிழ்வை ஏற்படுத்தும் வண்ணம் உரத்து வாசிக்கப்படுவது. இது சந்ததிகளிடையே பாலமாக அமைகிறது.

16. புத்தகம் எழுத்தாளர்கள், விளக்கப்படம்வரைபவர்கள், தயாரிப்பாளர்கள், அச்சகத்தினர், வடிவமைப்பாளர்கள், ஒப்புநோக்கிச் சீர்திருத்துபவர்கள், படப்பிடிப்பாளர்கள், நூலகர்கள், வெளியீட்டாளர்கள் மற்றும் புத்தகநிலையத்தினர் எனப் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது. இது செழுமையான கலாச்சாரவாழ்விற்கு பங்களிப்பதுடன் வெளிநாடுகளில் நமது நாட்டை அறிமுகப்படுத்த உதவும் பிரதான கலாச்சார ஏற்றுமதிப் பொருளாகும்.

17. சிறுவர் புத்தகம் இலக்கியத்துடனான முதல் சந்திப்பாகும் - வாழ்வு முழுவதும் நீடிக்கும் ஒரு வரையறையற்ற உலகமாகும்.